1980 ஆகஸ்ட் 5]

(ஆ) நடவடிக்கைச் சுருக்க வெளியீடு.

திரு. இரா. கருப்பையா : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆகஸ்ட் திங்கள் 1 ஆம் நாள் நம் சட்டமன்றப் பேரவையில் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு சம்பந்தமாகவும், அதற்கடுத்து தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு முறைப்படுத்துதல்) பற்றிய திருத்தச் சட்ட முன்வடிவு சம்பந்தமாகவும் ஆய்வுக் குழுவிற்கு அனுப்பப்படும் என்று சொல்லி, அதற்கான பெயர்களை அறிவித்தார்கள். இதை சட்டமன்றப் பேரவையின் செய்தித் தாள் நடவடிக்கை சுருக்கத்தில் தவறுதலாக மாற்றி வெளியிட்டிருக்கிறார்கள். இது சம்பந்தமாக . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தத் தவறுகள் என்னுடைய கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதற்கான திருத்தம் இன்றைக்கு வெளியிடப்படும்.

(முற்பகல் 10-10)

(இ) சட்டமன்ற உறுப்பினர்மீது ரெவின்யூ ரெகவரி ஆக்டின்கீழ் நடவடிக்கை.

திரு. இரெ. இராசமாணிக்கம் : நான் எந்தவிதமான பாக்கியும் செலுத்தத் தேவையில்லை என்று ஏற்கனவே தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். ரெவின்யூ ரெகவரி ஆக்டின்கீழ் 515 ரூபாய் நான் கட்ட வேண்டுமென்று அதை வசூலிக்க நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள் என்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தாங்கள் நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னீர்கள். இரண்டு தினங்களுக்கு முன்னால் தாலூகா அலுவலகத்திலிருந்து ரெவின்யூ இன்ஸ்பெக்டர் மூலம் 515 ரூபாய் கட்ட வேண்டுமென்று நோட்டீஸ் மறுபடியும் வந்திருக்கிறது. இது சம்பந்தமாக தாங்கள் என்ன தெரிவிக்க விரும்புகிறீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் இதுபற்றி ஏற்கனவே என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். என்னுடைய அறைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 10-30 மணிக்கு வந்தால் அதுபற்றிப் பேசலாம்.